# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்

| | |
|---|---|
| அ.வ.எண். 73/2015 | பி.வா.சா. 3 |
| பெயர் : ஆறுமுகம் | த/பெ. தொம்மு |
| தாலுகா : நத்தம், திண்டுக்கல் | கிராமம் : நத்தம் வட்டாட்சியர் |
| தேதி : 13.10.2025 | வயது : 38/2025 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

**<u>1ம் பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை</u>**

1) நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் தற்போது நத்தம் தாலுகாவில் வட்டாட்சியராக பணி புரிந்து வருகிறேன். அழைப்பாணையில் கண்ட ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். நத்தம் பட்டா எண்.302 ஆனது 19.10.2023ம் தேதி வாதி அறிவழகன் பெயரில் நத்தம் வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், 15.02.2011ம் தேதியே மேற்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது. கணிணியில் பதிவேற்றம் செய்ய உத்தரவிடப்பட்டதால் 19.10.2023ம் தேதி பட்டாக்கள் அனைத்தும் கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. நத்தம் பட்டா எண்.303 ஆனது வாதிகளின் சாட்சியான வா.சா.2 அசோக்குமார் பெயரில் 19.10.2023ம் தேதி நத்தம் வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், 12.10.2012ம் தேதியே மேற்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது. நத்தம் பட்டா எண்.822 ஆனது 19.10.2023ம் தேதி நல்லதம்பியாபிள்ளையின் மகன்கள் சிதம்பரம், அருணாச்சலம், சுப்பிரமணியன் ஆகியோர்களின் பெயரில் நத்தம் வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றால் 06.01.2023ம் தேதியே மேற்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது.

2) நத்தம் பட்டா எண்.897 ஆனது 19.10.2023ம் தேதி நல்லதம்பியாபிள்ளையின் மகன்கள் சிதம்பரம், அருணாச்சலம், சுப்பிரமணியன், துரைச்சாமி மற்றும் கந்தசாமி மகன் சண்முகம், செல்லம்பிள்ளை மகன் கந்தசாமி ஆகியோர்களின் பெயரில் நத்தம் வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், 06.01.2023ம் தேதியே மேற்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது. நத்தம் பட்டா எண்.898 ஆனது 19.10.2023ம் தேதி நல்லதம்பியாபிள்ளையின் மகன்கள் சிதம்பரம், அருணாச்சலம், துரைச்சாமி,

சுப்பிரமணியன், கந்தசாமி மகன் சண்முகம், செல்லம்பிள்ளை மகன் கந்தசாமி ஆகியோர்களின் பெயரில் நத்தம் வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், 06.01.2023ம் தேதியே மேற்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது. நத்தம் பட்டா என்பது அரசால் வழங்கக்கூடிய இலவச பட்டா என்றால் சரிதான். அரசாங்க நிலத்தில் தொடர்ச்சியாக 30 வருடங்கள் குடியிருந்து வந்தால் அவர்களுக்கு நத்தம் பட்டா வழங்கப்படும் என்றால் 10 ஆண்டுகள் குடியிருந்தாலே வழங்கப்படும்.

3) ஏற்கனவே சொந்தமாக வீடு இருக்கும் நபர்களுக்கு நத்தம் பட்டா வழங்கப்படுமா என்றால் இல்லை. நத்தம் பட்டா ஒரு நபருக்கு எத்தனை விஸ்தீரணம் கொடுக்கப்படும் என்றால் கிராமத்தை பொறுத்தவரையில் 3 செண்ட் கொடுக்கப்படும். நகர் புறங்களில் உள்ளவர்களுக்கு எத்தனை விஸ்தீரணம் கொடுக்கப்படும் என்றால் நகராட்சி என்றால் 2 செண்ட் கொடுக்கப்படும். திண்டுக்கல் மாவட்டத்தில் நத்தம் பட்டா வழங்கக்கூடிய அதிகாரி யார் என்றால் வட்டாட்சியர் வழங்க அதிகாரம் உள்ளது. கிராம நிர்வாக அலுவலர் நத்தம் பட்டா வழங்கமுடியுமா என்றால் முடியாது. வா.சா.ஆ.2 ஆவணமானது கிராம நிர்வாக அலுவலர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றால், பொதுவாக தாசில்தார் பட்டா வழங்கிய பிறகு நகல் கோரப்பட்டால் வருவாய்துறை பதிவேடுகளிலிருந்து கிராம நிர்வாக அலுவலர் அவர்களால் உண்மை நகல் என்று சான்றளித்து வழங்கப்படும். அந்த ஆவணம் தான் தற்போது என்னிடம் காட்டப்படுகிறது. அது பட்டா நகல் என்றால் சரிதான்.

4) நத்தம் பட்டா பெற மனு செய்யவேண்டுமா என்றால் ஆமாம். வா.சா.2 அசோக்குமார் என்பவர் மனு தாக்கல் செய்யாமலேயே நத்தம் பட்டா பெற்றுள்ளார் என்றால் நத்தம் பட்டா எண்.303 முதலில் தாக்கல் ஆகியிருந்த நல்லதம்பிபிள்ளை மகன் சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து அசோக்குமார் என்பவர் கிரையம் வாங்கியிருந்ததால் 12.10.2012ம் வருடம் அசோக்குமார் பெயருக்கு பட்டா மாறுதல் ஆகியுள்ளது. அதற்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது என்பது தொடர்பான விபரங்கள் தற்போது என்வசம் இல்லை என்பதாலும், அழைப்பாணையில் அந்த விபரங்கள் கோரப்படாததால் சாட்சி வசம் ஆவணங்கள் இல்லை என்பதால்,

வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 13.10.2025 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.10.13 19:25:07 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.